என்பதை மீண்டும் நான் இந்த அவையிலே உங்களிடத்திலே உறுதிபட தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய இரங்கல் செய்தியில் குறிப்பிட்டிருப்பதைப்போல, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, வேளாண் பெருங்குடி மக்களுக்கு உற்றதோழனாக இந்த அரசு இருக்கும் என்கின்ற அவருடைய செய்தியையே நானும் என்னுடைய பதிலாகத் தெரிவித்து, நீங்கள் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

பிற்பகல் 12–05

(இ) வேப்பனஹள்ளி தொகுதி, கொங்கனப்பள்ளி கிராமம், யானை தாக்கி விவசாயி உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு. கொங்கனப்பள்ளி கிராமத்தில் திரு. திம்மப்ப நாயுடு என்பவர் யானை தாக்கி உயிரிழந்தது குறித்து அ.தி.மு.க.-வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள், விதி எண் 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள், சுருக்கமாக ஒரே வரியில் கவனத்தை ஈர்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விதனமானப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட கொங்கனப்பள்ளி கிராமத்தில் 9–4–2022 அதிகாலை 5–00 மணியளவில் திம்மப்ப நாயுடு அவர்கள் தன்னுடைய மாடுகளுடன் சென்றிருக்கிறார். அப்போது அருகிலிருந்த யானை தாக்கி அந்த விவசாயி இறந்திருக்கிறார். அந்த விவசாயி இறந்தது குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் முன்னாள் அமைச்சர் அவர்கள், தன்னுடைய வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விதனமானப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட கொங்கனப்பள்ளி

கிராமத்தில் கடந்த 9–4–2022 அன்று அதிகாலை 5–00 மணியளவில் 65 வயதான திம்மப்ப நாயுடு என்பவர் யானை தாக்கி உயிரிழந்ததைக் குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து கவன ஈர்ப்பு, அறிவிப்பாகக் கொண்டு வந்துள்ளார். கர்நாடக மாநிலத்திற்குட்பட்ட பன்னேருகட்டா தேசிய பூங்கா மற்றும் காவேரி வன உயிரின சரணாலயத்திலிருந்து சுமார் 150 முதல் 175 எண்ணிக்கையிலான யானைகள் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வனக் கோட்டத்திற்குட்பட்ட காப்புக் காடுகளில் முகாமிட்டு வருகின்றன. ஏப்ரல் மாதத்தில் கர்நாடக மாநிலத்திற்குட்பட்ட முகலார் வனக் கோட்டத்திற்கும், ஆந்திரா மாநிலத்திற்குட்பட்ட வனப் பகுதிகளுக்கும் சென்று, அது மீண்டும் மே மாதத்தில் பன்னேருகட்டா தேசிய பூங்கா மற்றும் காவேரி வன உயிரின சரணாலயத்திற்கு திரும்பிச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளன. இரவு நேரங்களில் காப்புக் காட்டினைவிட்டு வெளியே வரும் யானைக் கூட்டங்களை வனப் பணியாளர்கள் மற்றும் வேட்டை தடுப்புக் காவலர்கள் பட்டாசுகள், தாரை தப்பட்டைகள், search லைட்டுகள் போன்றவற்றை வைத்து விவசாய நிலங்களிலிருந்து காப்புக் காட்டிற்குத் திருப்பும் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

9–4–2022 அன்று காலை சுமார் 5–00 மணியளவில் கொங்கனப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த 65 வயதான திம்மப்ப நாயுடு என்பவர், காப்புக் காட்டிற்கு அருகில் உள்ள அவருக்குச் சொந்தமான விவசாய நிலத்தில் பணிகளைப் பார்க்கச் சென்றபோது, காப்புக் காட்டிலிருந்து வெளியேறிய ஒற்றை யானை எதிர்பாராத விதமாக தாக்கியதில், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஏற்கெனவே மனித உயிரிழப்புக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ரூ.4 இலட்சத்திலிருந்து தற்போது ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி இறந்த நபரின் குடும்பத்திற்கு ரூ.50,000/– உடனடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், வாரிசுதாரர்களிடமிருந்து உரிய ஆவணங்கள் கிடைக்கப்பெற்றவுடன் மீதமுள்ள இழப்பீட்டுத் தொகையான ரூ.4,50,000/–ம் விரைந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மனிதர்கள் மற்றும் விளைநிலங்களுக்கு காட்டு யானைகளால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து பாதுகாக்க

2022 ஏப்ரல் 18] [திரு. கா. ராமசந்திரன்]

பல்வேறு திட்டங்களின்கீழ் ஓசூர் வனக் கோட்டத்தில் இதுவரை 299 கிலோ மீட்டர் தூரத்திற்கு யானைகள் புகா அகழிகள், 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு கற்களாலான தடுப்புச் சுவர்கள், 11 கிலோ மீட்டர் தூரத்திற்கு இரும்பு வட கம்பி வேலிகள், 10.7 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய சக்தியினால் இயங்கும் இரும்பு வட கம்பி வேலிகள், 11.05 கிலோ மீட்டர் தூரத்திற்கு தொங்கும் வகையிலான சூரிய மின் வேலிகளும் அமைக்கப்பட்டுள்ளன. மனித–உயிரின மோதல், பயிர்ச் சேதங்கள் போன்ற சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுக்க முன்னுரிமை அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் நன்றாகப் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். பிறகு நீங்கள் சொல்லுங்கள். நீங்கள் உட்காருங்கள். ஒரு நாளைக்கு இரண்டு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு, சட்டமன்றப் பேரவை விதி 55–ன்கீழ் எடுத்துக்கொள்ளப்பெறும். மாண்புமிகு முதல்வர் அவர்களும் சம்மதித்து, தற்போது தாராளமாக 4 சிறப்புக் கவன ஈர்ப்புகள் எடுத்துக்கொள்ளப்பெறுகின்றன. (குறுக்கீடு) எனவே, அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் எனக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத் தொடரின்போதும், சுமார் 1,000 கேள்விகள் கேட்பதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் அறிவுள்ளவர்கள்தான். அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் விவரம் தெரிந்தவர்கள்தான். (குறுக்கீடு) நீங்கள் ஏற்கெனவே, 'ஒருவர் இறந்துவிட்டார்' என்று குறிப்பிட்டு, அதற்கு மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியாகிவிட்டது. அவ்வளவுதான்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் நின்றுகொண்டு பேச வாய்ப்பு கேட்டுக்கொண்டிருந்தார்.)

சிறப்புக் கவன ஈர்ப்பில் ஓர் உறுப்பினருக்கு ஒரு கேள்வி கேட்பதற்குத்தான் வாய்ப்புத் தர முடியும். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சராக இருந்த, மாண்புமிகு அண்ணன் திரு. ஓ.பி.எஸ். இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்படும். அதனடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்டிருக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடு) அது கவன ஈர்ப்பு. இது சிறப்புக் கவன ஈர்ப்பு. சிறப்புக் கவன ஈர்ப்பில் ஓர் உறுப்பினருக்கு ஒரு முறைதான் பேச வாய்ப்பு வழங்கப்படும். இதனையே மரபாகக் கொள்ளக்கூடாது. ஒரே வார்த்தையில் கேளுங்கள். (குறுக்கீடு) சரி, என்னவென்று ஒரு வார்த்தையில் கேளுங்கள். (குறுக்கீடு) இது பழக்கமில்லை. ஒரு வார்த்தைதான் கேட்க வேண்டும். சிறப்புக் கவன ஈர்ப்பில், ஒரு வார்த்தையில் கேட்டு அமருங்கள்.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். இது ஒரு மரபு. இது வழிமுறை. வழக்கத்தில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பில் மட்டும்தான் இரண்டு வாய்ப்புகள் தரப்படும். ஆனால், சிறப்புக் கவன ஈர்ப்பில், ஒரு முறை பேச வாய்ப்பளிக்கப்பட்டு, அதற்கு ஒரு பதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்குவார்கள். அவ்வளவுதான். (குறுக்கீடு) சரி, நீங்கள் என்னவென்று சொல்லி, முடியுங்கள்.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல பதிலை அளித்திருந்தாலும்கூட, அந்தப் பகுதியில் நீண்ட தூரத்திற்கு காடுகள் அமைந்திருக்கின்ற காரணத்தினால், எந்த நேரத்திலும் காட்டு யானைகள் உள்ளே வருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அதனைத் தடுக்கின்ற வகையில், மின் வேலி அமைப்பதற்கு அரசு முன்வரவேண்டும்.

மேலும், யானைகள் விவசாய நிலங்களை மிக அதிகளவில் சேதப்படுத்தி விடுகின்றன. அதனால், விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர். எனவே, விளைவிக்கப்படுகின்ற விவசாயப் பொருட்களின்மூலம் வருவாய் ஈட்டப்படுகின்ற 3, 4 மாதங்களுக்குள்ளாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு

2022 ஏப்ரல் 18] [திரு. கே.பி. முனுசாமி]

உரிய நஷ்ட ஈடு வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குத் தெளிவாகப் பதில் சொல்லிவிட்டார்கள்.*

(ஈ) கோடைக் காலத்தில் ஏற்படும் மின் பற்றாக்குறையைப் போக்குவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறப்புக் கவன ஈர்ப்பு. கோடைக் காலத்தில் மின்வெட்டைக் குறைப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பது குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள், திரு. மா. சின்னதுரை அவர்கள், திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள், திரு. பி. தங்கமணி அவர்கள், திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள் திரு. K. மாரிமுத்து அவர்கள், திரு. ஜி.கே. மணி அவர்கள் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள் ஆகியோர் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

(மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் தொடர்ந்து நின்றுகொண்டு பேச வாய்ப்புக் கேட்டுக்கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. நாகைமாலி, நீங்கள் என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. வி.பி நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக்காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது சுட்டெரிக்கும் வெயில் நம்மை வாட்டத் துவங்கியிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நேரங்களில் மின்சாரத்தைச் சீரமைப்பது அரசினுடைய கடமை என்கிற முறையில், மின்வெட்டு மற்றும் மின் தடையால் பொது மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*